# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1685 - 2010 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2010.12.17

*1685 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 134 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

எஸ். பீ. நாவின்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

தாராநாத் பஸ்நாயக்க பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் எஸ். பீ. நாவின்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் சமாதானம், தூய எண்ணம், பரஸ்பர உறவு போன்றவற்றை வளர்க்கத் தூண்டுதலும்,

பிறவும்.

தாராநாத் பஸ்நாயக்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
குருநாகல் மாவட்டம்.

12-573

---

தற்காப்பு கலைகளுக்கான நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹுனைஸ் பாரூக் பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் தற்காப்பு கலைகளுக்கான நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவகத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. விசேட திறமையுள்ளவர்களுக்குக் கறுப்புப் பட்டி சான்றிதழ் வழங்குதல் ;

2. மாணவர்களுக்கு சீன தற்காப்புக் கலை பயிற்சி வழங்கலும்,

பிறவும்.

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

12-574

---

அல்ஹசன் மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹுசைன் பாரூக், பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் அல்ஹசன் மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்த்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. மன்றத்தின் நோக்கத்தை எய்துவதற்காக இஸ்லாமிய சமய பாடசாலைகள், வகுப்புக்கள், புத்தக விற்பனை நிலையங்களைத் தாபித்தல் ;

2. வயது வந்தவர்கள் மத்தியில் இஸ்லாமிய சன்மார்க்கத்தைப் போதித்தலும், குர்ஆன் ஓதுதலை கற்றுக் கொடுத்தலும் ;

பிறவும்,

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.

12-575

---

**பண்டு பண்டாரநாயக்க ஹெலஜன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

செஹான் சேமசிங்க பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் பண்டு பண்டாரநாயக்க ஹெலஜன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. பொருளாதார வளம் குன்றி இடருறும் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர உதவுதலும்,

பிறவும்.

செஹான் சேமசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
அநுராதபுரம் மாவட்டம்.

12-576

## ரன்ஜித் அலுவிஹாரே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அப்துல் ஹலீம், பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ரன்ஜித் அலுவிஹாரே மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. இலங்கை வாழ் இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்த உதவுதல் ;

2. பெண்கள் சிறுவர்கள், அங்கவீனர்களுக்கு உதவுதலும்,

பிறவும்.

அப்துல் ஹலீம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
கண்டி மாவட்டம்.

12-577

---

## மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறும்)

வழக்கு இலக்கம் : HC/C/41/2010/CO

282/5, காலி வீதி, கொழும்பு 3 என்னும் முகவரியையும் தற்பொழுது இல. 260/3, கலாநிதி டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 9 என்னும் முகவரியையும் சேர்ந்த இக்ரா இன்டர்நெஷனல் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் விடயத்திலும் ;

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII என்பதன்கீழ் நீதி மன்றத்தால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம் ஒன்றின் விடயத்திலும்

சம்பத் லீஸிங் அன்ட் பெக்டரிங் பிஎல்சீ
''சயுரு செவன'', இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 2.

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* :

இல. 110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2.

.................... மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான மனுவொன்று ''சயுரு செவன'', இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 2 என்னும் முகவரியைச் சேர்ந்த சம்பத் லீஸிங் அன்ட் பெக்டரிங் பிஎல்சீ யால் 2010, யூன் 29 ஆந் திகதியன்று மேற்படி நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் மேற்படி மனு 2011, சனவரி 31 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் விசாரணையின்போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் கொடுத்துதவப்படும் :-

சைமன் அன்ட் அசோஸியேட்ஸ்,
மனுதாரரின் சட்டத்தரணி,
மூன்றாம் மாடி,
இல. 40, கோல் பேஸ் கோர்ட் 2,
கொழும்பு - 03.

**குறிப்பு**.- மேற்படி மனுவின் விசாரணையின்போது தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் தமது எண்ணத்தைப்பற்றிய அறிவித்தலை மேற்கூறப்பட்ட சைமன் அன்ட் அசோஸியேட்ஸ் நிறுவனத்திற்கு எழுத்தில் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயரும் முகவரியும் அல்லது நிறுவனமொன்றெனில் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 29.01.2011 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்குப் பிந்தாமல் மேற்கூறப்பட்டவருக்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

சைமன் அன்ட் அசோஸியேட்ஸ்,
மனுதாரரின் சட்டத்தரணி.

மூன்றாம் மாடி,
இல. 40, கோல் பேஸ் கோர்ட் 2,
கொழும்பு - 03,
2010, திசெம்பர் 3.

12-578

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.